CUMBERLAND
CITY COUNCIL



# உங்களது சபை பற்றி அறிந்துகொள்ளுங்கள்

## கம்பலாந்து குடியிருப்பாளர்களுக்கான தகவல்கள்

# சபையானது எனக்காக எதனைச் செய்கிறது?

**சமுதாயத்தில் வசிக்கின்ற மக்களுக்காகச் சபை செய்கின்ற அனைத்து பல்வேறுபட்ட விடயங்கள் மற்றும் வழங்குகின்ற சலுகைகள் பற்றிய தகவல்களை நீங்கள் இந்தச் சிற்றேட்டிலிருந்து அறிந்துகொள்ள முடியும்.**

## வாழ்வும் பணியும்

இது எமது சமுதாயத்தைத் தூய்மையாகவும் பாதுகாப்பாகவும் பேணுவதற்காக ஒவ்வொரு குடியிருப்பாளரும் அறிய வேண்டிய அனைத்து முக்கிய விடயங்களையும் கொண்டதொரு துரித வழிகாட்டியாகும்.

## தொடர்புறுதல்

உங்களது சமுதாயத்துடன் உங்களால் எவ்வாறு அதிகமாகத் தொடர்புகொள்ள முடியும் மற்றும் சபையானது உங்களுக்கு, உங்களது நண்பர்களுக்கு அல்லது உங்களது குடும்பத்திற்கு வழங்க வேண்டிய பல்வேறுபட்ட ஆதரவுச் சேவைகள் யாவை என்பன பற்றி அறிந்துகொள்ளவும்.

## ஆராய்ந்து அறிந்து கொள்ளவும்

உள்நாட்டிலுள்ள அழகான இடங்களையும் பிரதேசங்களையும் கண்டுபிடியுங்கள். சமுதாயக் குழுக்களையும் செயற்பாடுகளையும் நடத்துவதற்கான வசதிகளை அறிந்துகொள்ளவும். கலை மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றவும். வருடாந்தம் இடம்பெறும் 50 பொது நிகழ்வுகளில் ஒரு நிகழ்வில் பங்குபற்றுவதன் மூலம் உங்களது சமுதாயத்தின் விழாவுக்கான வாய்ப்பினை வழங்கவும்.

## உங்களது கருத்துக்களைக் கூறுங்கள்

நீங்கள் உங்களது உள்நாட்டு சமுதாயத்தினை வடிவமைக்க விரும்புகின்றீர்களா? ஆதன அபிவிருத்தி முதற்கொண்டு உங்களது பிரதேசத்தின் எதிர்காலத்திற்கான திட்டமிடுகை வரையில், நீங்கள் கருதும் விடயங்கள் தொடர்பில் உங்களது கருத்துக்களை எவ்வாறு கூற முடியும் என்பது பற்றி அறிந்துகொள்ளவும்.

கம்பலாந்து சபையானது டாறுக் (பூர்வீக குடிகள்) மக்களை இந்த மண்ணின் பூர்வீகப் பாதுகாவலர்களாக அங்கீகரிப்பதோடு, மரணித்த, தற்போதுள்ள மற்றும் எதிர்கால வயோதிபர்களுக்கு எமது மரியாதையையும் செலுத்துகின்றோம்.

# உள்ளடக்கங்கள்


## உயிர் வாழ்தலும் பணியாற்றுதலும்:

### குடியிருப்பாளர்கள் மற்றும் வியாபாரங்களுக்கான முக்கிய தகவல்.........2

வரிகள்...2
கழிவு சேகரிப்பு...3
மீள்சுழற்சியாக்கம்...3
இல்ல துப்பரவாக்கல் சேவை ஒன்றுக்கான முன்பதிவு செய்தல்...3
அபாயம் மிக்க கழிவுகளுக்கான சமுதாய மீள்சுழற்சியாக்கச் சேவை...4
வர்த்தக கழிவுச் சேவை...4
அஸ்பெஸ்டஸ் (கல்நார் விரிப்புகள்)...4
சமுதாய உபயோகமுடைய கூரிய சாதனங்கள்...4
சேதன மற்றும் உணவுக் கழிவினைக் குறைத்தல்...5
இரசாயன துப்பரவாக்கம்...5
கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மின்கலங்களின் மீள்சுழற்சியாக்கம்...5
சட்டவிரோதமாக கழிவுகளை குவித்தல்...5
சுற்றாடல் ரீதியான சேவைகள்...6
செல்லப் பிராணிகள்...6
இல்லப்புற நீச்சல் தடாகம்...6
மரங்கள்...6
உங்களது காணியை அபிவிருத்தி செய்தல்...7
வெளிச்சூழல் சார்ந்த உணவகம்...7
உணவு வியாபாரமும்...7
பாதுகாப்பு விடயங்கள்...8
நீங்கள் திருத்தப்பட வேண்டிய ஏதேனும் விடயம் பற்றி அறிகின்றீர்களா?...8
சபையினை தொடர்புகொள்வது எவ்வாறு?...8

## இணைதல்:

### சமுதாயச் சேவைகள்.........9

அணுகலுக்கான குறுந்தூரப் பேரூந்துச் சேவை...9
ஊட்டச் சத்துள்ள உணவுச் சேவைகள் (உணவுகள்)...10
உடல் ஆரோக்கியமும் 55 இற்கும் மேற்பட்டவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும்...10
அங்கவீனமுற்ற மக்களுக்கான சமூக ரீதியான ஆதரவு...10
மூத்த குடிமக்களின் வசதிக்கேற்ற இல்லம்...11
தன்னார்வச் சேவை...11
ஆயுட்கால கற்றல் நிகழ்ச்சித்திட்டம்...11
மானியங்கள்...12
சமுதாய தோட்டங்கள்...12
இளைஞர் நிகழ்ச்சித்திட்டங்கள்...12
பாடசாலை விடுமுறை நிகழ்ச்சித்திட்டம்...13
தடுப்பூசி வழங்கல்...13
நீண்டகால பராமரிப்பு...14
அவ்வப்போது பராமரிப்பு...14
குடும்ப பகல்நேர பராமரிப்பு...14
பாடசாலை நேரம் தவிர்த்த பராமரிப்பு (OOSH)...15
எழுத்தறிவு சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள்...15
புஷ் பாடசாலை-மத்திய தோட்டங்கள், மெரிலான்ட்ஸ்...15
சமுதாய நிலையங்கள்...16
பிராந்தியப் பூங்காக்கள்...16
விளையாட்டு மைதானங்கள், ரென்னிஸ்...16
நீச்சல் தடாக நிலையங்களும் நீச்சலுக்கான கற்றலும்...17
பூங்காக்களும் விளையாட்டு மைதானங்களும்...17
மேலும் கண்டறிதல் மற்றும் முன்பதிவு செய்தல்...17

## சபையின் சேவைகள் வரைபடம்:.....18

## அறிந்துகொள்ளல்:

### கலை, கலாசாரம் மற்றும் நிகழ்வுகள்..........21

பீகொக் காட்சிக்கூடம் மற்றும் ஆபேர்ன் கலை அரங்கு...21
சமுதாய நிகழ்வுகள்...21

## அறிந்துகொள்ளல்: நூலகங்கள்...............22

இலவசமாக இணைந்து ஒரு நூலக அனுமதி அட்டையினைப் பெற்றுக்கொள்ளல்...22
எந்தவொரு நூலகத்திலும் உங்களால் செய்யக்கூடியவை யாவை?...22
சிறுவர்கள் மற்றும் குடும்பத்தினருக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்...22
வயது வந்தவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்...23
விளையாட்டுப் பொருள் நூலகம்...23
உங்களுக்கு அண்மையில் நூலகம் எங்கே உள்ளது?...23

### உங்களது கருத்துக்களைக் கூறுங்கள்..........25

சபையின் கூட்டங்கள்...25
குழுக்கள்...26
சமுதாய ஈடுபாடு...26
உள்ளக ஒம்புட்ஸ்மன் பகிர்வுச் சேவை...26
பாராட்டுதல்களும் முறைப்பாடுகளும்...27
சபை பற்றியது...27
கம்பலாந்துத் தொகுதியின் வரைபடம்...28
சபை உறுப்பினரின் தொடர்புகொள்ளல் விபரங்கள்...29



# உயிர் வாழ்தலும் பணியாற்றுதலும்:

## குடியிருப்பாளர்கள் மற்றும் வியாபாரங்களுக்கான முக்கிய தகவல்



## வரிகள்

சபையானது அதன் வருமானத்தினை பெறுகின்ற பிரதான வழிமுறையாக வரிகள் திகழ்கின்றன. இத்தகைய வரிகள் அத்தியாவசிய உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உபயோகிக்கப்படுவதோடு, அவை எமது சமுதாயத்தினை தூய்மையாகவும் பாதுகாப்பாகவும் அணுகல் மிக்கதாகவும் தொடர்புபடுத்தப்பட்டதாகவும் மற்றும் அபிவிருத்தி மிக்கதாகவும் பேணுவதற்கும் உதவுகிறது.

நீங்கள் ஒரு இல்லத்தினை அல்லது வியாபாரத்தினை சொந்தமாகக் கொண்டிருப்பின், நீங்கள் உங்களது உள்நாட்டு சபைக்கு வரிகளைச் செலுத்த வேண்டும் (மேலும் பாடசாலை மற்றும் தேவாலயங்கள் போன்ற வரி விலக்களிப்புடைய சில நிறுவனங்களும் உள்ளன).

நீங்கள் உங்களது வரிகளைச் செலுத்தக்கூடிய பல்வேறுபட்ட வழிமுறைகள் காணப்படுகின்றன -நபர் ஒருவர் வாடிக்கையாளர் தொடர்பு நிலையம் ஒன்றுக்கு வருகையளித்து கொடுப்பனவுகளை செலுத்துதல் முதற்கொண்டு இயங்கலை மூலமாக செலுத்துதல் வரை.

## சபை மற்றும் அதன் சேவைகள் பற்றி மேலும் அறிந்துகொள்ளல்

நீங்கள் ஒரு சுயாதீன ஊடாட்டம் மிக்க செயலமர்வில் அல்லது பேரூந்துப் பயணத்தில் பங்குகொள்ள முடியும். இவை உள்நாட்டுக் குடியிருப்பாளர்களுக்கு ஆங்கில மொழியில் அல்லது தெரிவுசெய்யப்பட்ட சமுதாய மொழிகளில் வழங்கப்படும். நீங்கள் உங்களை அல்லது உங்களது சமுதாயக் குழுவினை கீழுள்ள இணைய முகவரியூடாக முன்பதிவு செய்துகொள்ள முடியும். : **www.cumberland.nsw.gov.au/discover-cumberland.**

# கழிவு சேகரிப்பு

சபையானது உங்களது கழிவுகள் மற்றும் மீள்சுழற்சிக் குப்பைத்தொட்டிகளைச் சேகரிக்கும் சேகரிக்கும் தினமானது நீங்கள் வதியும் பிரதேசத்தினைப் பொறுத்துக் காணப்படுவதோடு, அது பற்றிய தகவலை சபைக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொள்வதன் மூலம் அல்லது எமது இணையத்தளத்திற்குச் சென்று பார்வையிடுவதன் மூலம் உங்களால் அறிந்துகொள்ள முடியும். கம்பலாந்திலுள்ள ஒவ்வொரு வதிவிடத்திற்கும் சாதாரண கழிவுத் தொட்டி (சிவப்பு நிற மூடி) ஒன்றும் மீள்சுழற்சியாக்கத் தொட்டி (மஞ்சல் நிற மூடி) ஒன்றும் வழங்கப்படும். நீங்கள் ஒரு இல்லத்தில் வசிப்பவராயின், தோட்டக் கழிவுத் தொட்டி (பச்சை நிற மூடி) ஒன்றும் வழங்கப்படும்.

எப்போதும் கழிவுகளை அவற்றுக்குரிய தொட்டியில் போடுவது முக்கியமானதாகும். உணவுக் கழிவு, வீட்டுக் கழிவுப் பைகள், பஞ்சுகள் மற்றும் கழிவுத்துணிகள் போன்றவற்றை இடுவதற்கு உங்களது சாதாரண கழிவுத்தொட்டியை உபயோகிக்கவும். உங்களது மீள்சுழற்சியாக்கத் தொட்டியில் பிளாஸ்டிக் வெற்றுப் போத்தல்கள் மற்றும் பாத்திரங்கள், அட்டைகள் மற்றும் கடதாசிகள், உலோகம் மற்றும் அலுமினியப் பாத்திரங்கள், தெளிப்பான் போத்தல்கள் மற்றும் கண்ணாடிப் போத்தல்கள் மற்றும் ஜாடிகள் போன்றவற்றை இடவும். சிறிய மரக்கொப்புகள், மலர் கத்தரிப்புகள், வெட்டப்பட்ட துண்டுகள், வெட்டப்பட்ட புற்கள் மற்றும் இலைகள் போன்றவற்றை இடுவதற்கு உங்களது தோட்டக் கழிவுத் தொட்டியை உபயோகிக்கவும்.



உங்களது கழிவுத்தொட்டி காணாமற்போனால் அல்லது சேதமடைந்தால், **8757 9000** இற்கு அழைத்து சபையினைத் தொடர்புகொள்வதன் மூலம் கழிவுத்தொட்டியைத் திருத்திக் கொள்வதற்கு அல்லது பதிலீடு செய்துகொள்வதற்கு உங்களால் முடியும்.




# மீள்சுழற்சியாக்கம்

எப்போதும் கழிவுகளை அவற்றுக்குரிய தொட்டியில் போடுவது முக்கியமானதாகும். உங்களது மஞ்சல் நிற மூடியைக் கொண்ட மீள்சுழற்சியாக்கத் தொட்டியில் இடப்படவேண்டிய பொருட்களை மாத்திரம் கொண்ட பட்டியல் பின்வருமாறு:

- பிளாஸ்டிக் வெற்றுப் போத்தல்கள் மற்றும் பாத்திரங்கள்
- அட்டைப் பெட்டிகள் மற்றும் அட்டைகள் (உங்களது தொட்டியில் இடவசதியைப் பேணும் வகையில் அவற்றைத் தட்டையாக்கிப் போடவும்)
- கடதாசி - அனைத்து வகைகளும்
- அலுமினியப் பாத்திரம், தெளிப்பான் போத்தல்கள் உள்ளிட்டவை
- உலோகப் பாத்திரங்கள்
- கண்ணாடிப் போத்தல்கள் மற்றும் ஜாடிகள்

# இல்ல துப்பரவாக்கல் சேவை ஒன்றுக்கான முன்பதிவு செய்தல்

மீள உபயோகிக்க முடியாத அல்லது மீள்சுழற்சியாக்கம் செய்ய முடியாத வீட்டு மின்சார சாதனங்கள் அல்லது தளபாடங்கள் போன்ற பெருமளவு கழிவுகளை நீங்கள் கொண்டிருப்பின், அவற்றை அகற்றுவதற்காக சபையின் துப்பரவாக்கல் சேவையைப் பெறுவதற்கு நீங்கள் ஒரு முன்பதிவினைச் செய்ய முடியும். ஒவ்வொரு வருடமும் வதிவிடங்களுக்காக நான்கு முறை இத்தகைய சேவை வழங்கப்படும்.

ஏற்றுக்கொள்ளத்தகு பொருட்களில் உள்ளடங்குபவை: தளபாடம், வீட்டு மின்சார சாதனங்கள், ஒன்றாகக் கட்டப்பட்ட மரக்கந்துகள், தரை விரிப்புகள் மற்றும் மெத்தைகள்.

நீங்கள் சபைக்கு அழைப்பினை மேற்கொள்வதன் மூலம் அல்லது இயங்கலை மூலம் இந்தச் சேவைக்கான முற்பதிவினை மேற்கொள்ள முடியும். இந்தக் கழிவு சேகரிப்பிற்காக உங்களுக்கு ஒரு தினம் வழங்கப்படுமென்பதோடு, சேகரிப்பிற்கு முன்னர் குறித்த கழிவுகளை இரவில் வெளியில் வைத்தல் வேண்டும். முன்பதிவு முக்கியம் என்பதோடு இது தொடர்பில் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும். இது பற்றிய மேலதிக தகவல்களுக்கு சபையின் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.



# அபாயம் மிக்க கழிவுகளுக்கான சமுதாய மீள்சுழற்சியாக்கச் சேவை



அகற்றப்படுவதற்கான பின்வரும் ஏதேனும் கழிவுகள் உங்களிடம் இருக்குமாயின், உங்களால் அபாயம் மிக்க கழிவு சேகரிப்புச் சேவை ஒன்றுக்கான முற்பதிவினை மேற்கொள்ள முடியும். இத்தகைய கழிவுகளை சபையானது மீள்சுழற்சி செய்கிறது மற்றும்/அல்லது அவற்றைப் பாதுகாப்பாக அகற்றுகிறது:

- பெயின்ட் வாளிகள்
- BBQ எரிவாயுப் போத்தல்கள் அல்லது தீயணைப்பான்கள்
- வாகனங்களின் அல்லது வீட்டு உபயோக மின்கலங்கள்.
- மோட்டார் அல்லது சமையல் எண்ணெய்
- மின்மம் சார்ந்த கழிவு - சிறியதர மின் சாதனங்கள், தொலைக்காட்சிப்பெட்டிகள் அல்லது கணினிகள்
- புகை உணர் கருவிகள்
- புளர்சன் மின்குமிழ்கள் மற்றும் குழாய் வடிவ மின்குமிழ்கள்

நீங்கள் **problemwaste.com.au** எனும் இணையத்தள முகவரியூடாக அல்லது சபைக்கு அழைப்பினை மேற்கொள்வதன் மூலம் உங்களது கழிவு சேகரிப்பிற்கான முற்பதிவினை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும். இது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும் என்பதோடு இது பற்றிய மேலதிக தகவல்களுக்கு சபையின் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.

# வர்த்தக கழிவுச் சேவை

சபையானது வர்த்தக நிலையங்களுக்கான கழிவு மற்றும் மீள்சுழற்சிச் சேவைகளையும் வழங்குகிறது. இது தொடர்பிலான கழிவுத்தொட்டியின் அளவுகள், சேவை வழங்கப்படுகின்ற தடவைகள் மற்றும் அதற்கான செலவு போன்றன பற்றிய மேலதிக தகவல்களை சபையின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



# அஸ்பெஸ்டஸ் (கல்நார் விரிப்புகள்)

அஸ்பெஸ்டஸ் பற்றியும் அவற்றை பாதுகாப்பான முறையில் அகற்றும் முறை பற்றியும் நீங்கள் சிறப்பாக உணர்ந்துகொள்ளும் வகையில், சபையானது அஸ்பெஸ்டஸ் பற்றிய விழிப்பூட்டல் முன்னெடுப்புக்களை மேற்கொண்டுவருகிறது. இது தகவல் அமர்வுகள், இல்ல மேற்பார்வைகள் மற்றும் பாரம்பரிய அஸ்பெஸ்டஸை சிறியளவில் சேகரித்தல் போன்றவற்றைக் கொண்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது சிறிதளவு அஸ்பெஸ்டஸ்களுக்கான ஒரு சட்ட ரீதியான, சௌகரியம் மிக்க கழிவகற்றல் தீர்வினை வழங்குவதற்காக சபையினால் விருத்திசெய்யப்பட்டுள்ளது. இது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும். இது பற்றிய மேலதிக தகவல்களுக்கு அல்லது இதற்கான முன்பதிவினை மேற்கொள்வதற்கு தயவுசெய்து **8757 9000** எனும் இலக்கம் ஊடாக சபைக்கு அழைப்பினை மேற்கொள்ளவும்.

# சமுதாய உபயோகமுடைய கூரிய சாதனங்கள்



சமுதாயத்திலுள்ள நீரிழிவு நோயாளிகள் மற்றும் ஏனைய ஊசியேற்றல் சாதனங்களை உபயோகிப்போருக்காக ஊசி/சிறிஞ்சிகளை அகற்றுவதற்கானதொரு பாதுகாப்பான சேவையினை வழங்கும் நோக்கில் சபையானது உள்நாட்டு மருந்தகங்களுடன் கூட்டிணைந்துள்ளது. மருந்தகங்கள் மற்றும் ஏனைய இடங்களில் பங்கேற்றல் பற்றிய தகவல்கள் சபையின் இணையத்தளத்தில் உள்ளன.

## சேதன மற்றும் உணவுக் கழிவினைக் குறைத்தல்



கூட்டுப்பசளை தயாரிப்பு மற்றும் புழு வளர்ப்பு போன்றன உங்களது சேதன மற்றும் உணவுக் கழிவுகளை மீள்சுழற்சி செய்வதற்கான இயற்கை வழிமுறைகளாகத் திகழ்கின்றன. நீங்கள் இல்லத்தில் கூட்டுப்பசளை தயாரிப்பதற்கு அல்லது புழு வளர்ப்பினை ஆரம்பிப்பதற்கு உதவும் வகையில் சபையானது நீங்கள் கொள்வனவு செய்யக்கூடிய ஏதேனும் கூட்டுப்பசளைத் தொட்டி அல்லது புழு வளர்ப்பு தொடர்பில் சலுகை வழங்கக் கூடுமென்பதோடு, இத்தகைய திட்டத்தினை ஆரம்பித்தல் மற்றும் அது பற்றிய பொதுவான தகவல்கள் மற்றும் பிரச்சினைக்கான தீர்வுகள் போன்றன குறித்தான செயலமர்வினையும் சபையினால் வழங்க முடியும்.

சபையானது Love Your Leftovers App பிரயோகம் ஒன்றினையும் மற்றும் Cookbook ஐயும் விருத்திசெய்துள்ளது.




## இரசாயன துப்பரவாக்கம்

உங்களது தேவையற்ற, வீட்டு உபயோக இரசாயனப் பொருட்களை அகற்றும் நோக்கில் இலவச மற்றும் சுற்றாடல் ரீதியான பாதுகாப்பு மிக்க வாய்ப்பொன்றினை உங்களுக்கு வழங்குவதற்காக, சபையானது நியு சவுத் வேல்ஸ் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையுடன் இணைந்து பணியாற்றுகிறது.

இது உங்களது அலுமாரிகள், வாகன பழுதுபார்க்கும் இடங்கள், கொட்டகைகள் மற்றும் துணிகள் சலவைப் பிரதேசம் போன்ற இடங்களிலுள்ள தேவையற்ற இரசாயனப் பொருட்களை அகற்றித் துப்பரவாக்குவதற்கானதொரு பாரிய சந்தர்ப்பமாகுமென்பதோடு, இத்தகைய கழிவுகளை மீள்சுழற்சி செய்வதற்கு அல்லது சரியான முறையில் அகற்றுவதற்கு அவற்றை சபையிடம் வழங்கவும்.

அடுத்த சேகரிப்புத் தினம், இடம் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தகு பொருட்கள் போன்றன பற்றிய தகவல்களுக்கு சபையின் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.

## கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மின்கலங்களின் மீள்சுழற்சியாக்கம்



கையடக்கத் தொலைபேசி மற்றும் வீட்டு உபயோக மின்கலங்கள் போன்றவற்றை அவற்றின் மீள்சுழற்சிக்காக அனைத்து நூலகங்களிலும் மற்றும் மெரிலான்ட் மற்றும் ஆபேர்ன் வாடிக்கையாளர் தொடர்பு நிலையங்களிலும் கையளிக்க முடியும்.



சபையின் பிராந்திய சட்டவிரோத கழிவுக்குவிப்புப் படைத் திட்டமானது (RID) கழிவுப் பொருட்கள் பற்றிய வரி அறவீட்டிலிருந்தான நிதியிடல் மூலம் நியு சவுத் வேல்ஸ் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையினால் ஆதரவளிக்கப்படுகிறது.

## சட்டவிரோதமாக கழிவுகளை குவித்தல்

யாரேனும் நபர் கழிவகற்றலுக்கான முன்பதிவு ஒன்றினைச் செய்யாமல், தமது கழிவுகளை சபையின் இயற்கைப் பிரதேசத்தில், தமது இல்லத்திற்கு வெளியில் அல்லது ஏனைய ஏதேனும் பொது இடங்களில் குவிப்பார்களாயின், இது சட்டவிரோதச் செயலாகக் கருதப்படும்.

கழிவுகளைக் குவிப்பதானது சுற்றாடலை மாசுறச் செய்வதோடு, சமுதாயத்திற்கான ஒரு பாதுகாப்பு சார்ந்த இடராகவும் இருக்கின்ற அதேவேளை, எமது பிரதேசத்திற்கு அசுத்தமான தோற்றத்தினையும் அது வழங்குகிறது. இவ்வாறு கழிவுகளைக் குவிக்கும் நபர்கள் ஒரு குற்றம் புரிந்தவர்களாக கருதப்பட்டு அவருக்கு $8,000 வரை அபராதமும் விதிக்கப்படக் கூடும்.

நீங்கள் உங்களது பிரதேசத்தில் இத்தகைய சட்டவிரோத கழிவுக் குவியலைக் கண்டால், **8757 9000** எனும் இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி அது பற்றி சபைக்கு அறிவிக்க வேண்டும்.

## சுற்றாடல் ரீதியான சேவைகள்

சபையானது சுற்றாடல் மீதான உங்களது செயற்பாடுகளின் விளைவுகள் பற்றி அறிந்துகொள்ளல் மற்றும் நீடித்து நிலைக்கும் வகையிலான வாழ்க்கையின் அனுகூலங்களை நீங்கள் அனுபவிப்பதற்கு உதவுதல் போன்ற நோக்கங்களில் உங்களுக்கான சமுதாய சுற்றாடல் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டுள்ளது. இது தொடர்பில் ஈடுபடுவதற்கு எமது இணையத்தளத்தினைப் பார்வையிடவும் அல்லது **8757 9000** இற்கு அழைக்கவும்.

## செல்லப் பிராணிகள்

உங்களது செல்லப்பிராணிகளான நாய்கள் மற்றும் பூனைகளுக்கு மைக்ரோசிப் பொருத்தப்பட்டு அவற்றுக்கு ஒரு ஆயுட்கால பதிவுக் கட்டணம் செலுத்துவதற்கான சட்ட ரீதியான தேவைப்பாடு உங்களுக்கு உள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா? இது உங்கள் செல்லப் பிராணி காயப்பட்டால், அதனை இழந்தால் அல்லது அது திருடப்பட்டால் அதனைப் பாதுகாக்க உதவும்.

பிராணிகள் வழிதவறிச் சென்றதாக அல்லது காணாமற்போனதாக அறிக்கை செய்யப்படுமிடத்து, சபையானது அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மேலதிக தகவல்களுக்கு அல்லது உங்களது செல்லப்பிராணியைப் பதிவுசெய்வதற்கு, சபையின் இணையத்தளத்தினைப் பார்வையிடவும் அல்லது **8757 9000** இற்கு அழைக்கவும்.





## இல்லப்புற நீச்சல் தடாகம்

நீரில் மூழ்குதல் இளம் பிள்ளைகளின் எதிர்பாராத மரணத்திற்கு ஒரு பிரதான காரணியாக இருக்கின்றது. நியு சவுத் வேல்ஸிலுள்ள சுமார் 300,000 இற்கும் அதிகமான இல்லப்புற நீச்சல் தடாகங்களுக்கு மத்தியில், ஒட்டுமொத்த சமுதாயத்தையும் பாதிக்கும் வகையிலான நீச்சல் தடாகம் குறித்தான பாதுகாப்பானது ஒரு இன்றியமையாத அம்சமாகும். நீச்சல் தடாகங்கள் அவுஸ்திரேலிய சட்டங்களுக்கு இணங்க அமையவேண்டியது கண்டிப்பானதாகும்.

**உங்களது நீச்சற்தடாகத்தைப் பதிவுசெய்தல்: நீங்கள் கண்டிப்பாக உங்களது நீச்சற்தடாகத்தைப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதோடு, அதன் சுற்று வேலிகள் மற்றும் தடைகள் போன்றன சிறுவர்களின் பாதுகாப்பிற்கு ஏற்ற வகையில் அமைந்திருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் சபை உங்களது நீச்சற்தடாகங்களை மேற்பார்வை செய்கிறது. நீச்சல் குளங்களைச் சுற்றிக் குழந்தைகள் வரும்போது சட்டங்கள் அமுலில் உள்ளன.**

## மரங்கள்

நீங்கள் ஒரு மரத்தினை வெட்டிக் குறைப்பதற்கு அல்லது ஒரு மரத்தினை வெட்டி அகற்றுவதற்கு முன்னர் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இது தொடர்பில் நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி அறிந்துகொள்ள சபையின் இணையத்தளத்தினைப் பார்வையிடவும் அல்லது **8757 9000** இற்கு அழைக்கவும்.





## உங்களது காணியை அபிவிருத்தி செய்தல்

பின்வருவன தொடர்பில் நீங்கள் திட்டமிடுவதாயின், அதற்கான அனுமதியினை நீங்கள் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

- காணியை உபயோகித்தல்
- காணியைப் பிரித்தல்
- ஒரு கட்டடத்தினைக் கட்டுதல்
- அபிவிருத்திப் பணியினை மேற்கொள்ளல்
- ஒரு கட்டமைப்பினை இடித்து உடைத்தல்
- அபிவிருத்திக்கான ஒப்புதல் அவசியமான ஏனைய வேறு அபிவிருத்திப் பணிகள்

அபிவிருத்திக்கான ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கு, நீங்கள் கம்பலாந்துச் சபையிடம் 'அபிவிருத்தி பற்றிய விண்ணப்பம்' (DA) ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர்பில் நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி அறிந்துகொள்வதற்கு, தயவுசெய்து சபையின் இணையத்தளத்தினைப் பார்வையிடவும் அல்லது **8757 9000** எனும் இலக்கத்திற்கு சபைக்கு அழைப்பினை மேற்கொண்டு அபிவிருத்தி விசாரணை அலுவலர் ஒருவருடன் தொடர்புகொள்ளவும். மேலும் நீங்கள் உங்களது காணியில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பான உங்களது உத்தேசம் பற்றி உங்களது அயலவர்களுக்கும் தெரிவிப்பது சிறந்ததாகும்.

## வெளிச்சூழல் சார்ந்த உணவகம்

நீங்கள் ஒரு விருந்தோம்பல் வியாபாரத்தினை மேற்கொள்பவராகவிருந்து, வெளிச்சூழல் சார்ந்த உணவக வசதிக்காக நடைபாதைப் பிரதேசத்தினை உபயோகிக்க விரும்பினால், சபையானது அதற்கான ஆலோசனை மற்றும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பச் செயன்முறை ஆகியவற்றை வழங்கி உங்களுக்கு உதவக்கூடும்.





## உணவு வியாபாரமும் பொதுச் சுகாதாரமும்

சபையானது நியு சவுத் வேல்ஸ் உணவு அதிகாரசபையுடன் இணைந்து உணவு முகாமைத்துவத்திற்கான சுகாதார நியமதரங்களை மேம்படுத்தும் நோக்கில் வியாபார நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கின்றது. இதில் இயங்கலை மூலமான பயிற்சி மற்றும் உணவுப் பாதுகாப்பு பற்றிய சிறப்பு அங்கீகார நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன உள்ளடங்குகின்றன.

மேலும், சபையின் சுற்றாடல் சார்ந்த சுகாதாரச் சேவைக் குழுவானது நடமாடும் சேவை, தற்காலிக மற்றும் இல்ல - மைய வியாபாரங்கள், சரும பராமரிப்புத் தொழில் மற்றும் கைத்தொழில் வியாபாரம் போன்றன உள்ளிட்ட உணவு வியாபாரத்தில், சுற்றாடல் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் ஈடுபடுகிறது.

கம்பலாந்துச் சபையின் உணவு விடயங்கள் பற்றிய தகவல் வழிகாட்டலானது உணவுப் பாதுகாப்பு விடயங்கள் மற்றும் சிறந்த உணவுப் பாதுகாப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் போன்றன பற்றிய சமகால தகவல்களை உணவு வியாபாரிகளுக்கு வழங்குகிறது.

## பாதுகாப்பு விடயங்கள்

அனைத்து அவசரமல்லாத பொலிஸ் உதவி தேவையான விடயங்களும் **131 444** எனும் பொலிஸ் உதவிச் சேவைக்கு அழைப்பு மேற்கொள்ளப்பட்டு தெரிவிக்க முடியும்.

அனைத்து அவசர விடயங்கள் பற்றியும் **000** இற்கு அழைப்பினை மேற்கொண்டு காவல்துறையினருக்கு நேரடியாகவே தெரிவிக்க வேண்டும்.

சமுதாய பாதுகாப்பு விடயங்கள் மற்றும் அணுகல் தொடர்பான பிரச்சினைகள் போன்றவற்றை இனங்கண்டு அவற்றுக்கு பதிலளிக்கும் நோக்கிலான நகர மைய பரிசோதனைகளை கம்பலாந்து முழுவதும் கிரம அடிப்படையில் மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. சபையின் பணியாட்டொகுதியில் மற்றும் பொலிஸில் இணைந்து நகரின் மையப் பிரதேசங்களில் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக வியாபார மற்றும் சமுதாய அங்கத்தவர்கள் அழைக்கப்படுகின்றனர். அடுத்துவரவுள்ள பரிசோதனைகள் பற்றிய விபரங்களை அறிந்துகொள்வதற்கு **cumberland.nsw.gov.au/safety** எனும் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.






## நீங்கள் திருத்தப்பட வேண்டிய ஏதேனும் விடயம் பற்றி அறிகின்றீர்களா?

குடியிருப்பாளர்களும் வியாபாரிகளும் தமது பிரதேசத் தோற்றம் அழகுறப் பிரகாசிப்பதில் பெருமைகொள்கின்றனர் என்பதை நாம் அறிகின்றோம்.

நடைபாதைகள், வீதிகள் சேதமடைந்திருத்தல், வடிகால் தடைப்பட்டிருத்தல், தள்ளுவண்டிகள் கைவிடப்பட நிலையில் காணப்படுதல் அல்லது அவதானம் தேவையான ஏதேனும் விடயங்கள் பற்றி அறிவிப்பதற்கு **8757 9000** எனும் இலக்கம் ஊடாக அல்லது **council@cumberland.nsw.gov.au** எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாக சபையினைத் தொடர்புகொண்டு தெரிவிக்கவும்.

## சபையினை தொடர்புகொள்வது எவ்வாறு?

உங்களது விசாரணைகளுக்கு உதவும் வகையில் எமது நட்பு நேயம் கொண்ட வாடிக்கையாளர் தொடர்புக் குழு காணப்படுகிறது:

தொலைபேசி: **8757 9000**
மின்னஞ்சல்: **council@cumberland.nsw.gov.au**
தொலைநகல்: **9840 9734**
அஞ்சல் முகவரி: **PO Box 42, Merrylands NSW 2160**

நேரில்: **16 Memorial Avenue, Merrylands**
**1 Susan Street, Auburn**

பன்மொழி உதவிக்கு: தயவுசெய்து 131 450 இற்கு அழைத்து **மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவையினைத்** தொடர்புகொண்டு 8757 9000 எனும் இலக்கத்தில் கம்பலாந்துச் சபைக்கு இணைப்பினை வழங்குமாறு வேண்டவும்.

நீங்கள் செவிப்புலற்றவராயின் அல்லது செவிப்புலன் குறைபாடு அல்லது பேச்சுக் குறைபாடுள்ளவராயின், நீங்கள் **தேசிய ரிலே சேவை**. உடாக எங்களை நேரடியாகவே தொடர்புகொள்ள முடியும். தயவுசெய்து உங்களுடைய அழைப்பின் போது சபையின் தொடர்பு இலக்கமாகிய 8757 9000 ஐ வழங்கினால் நீங்கள் எம்முடன் இணைக்கப்படுவீர்கள்.



# இணைதல்: சமுதாயச் சேவைகள்

## அணுகலுக்கான குறுந்தூரப் பேருந்துச் சேவை



மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் வசதியைக் கொண்ட உள்நாட்டு அரசாங்கப் பிரதேசம் முழுவதும் குடியிருப்பாளர்களை இணைக்கும் வகையில் சபையானது இரண்டு குறுந்தூரப் பேருந்துச் சேவைகளை வழங்குகிறது:

- வார நாட்களுக்கான "அணுகல் குறுந்தூரச் சேவை" (செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை, மற்றும் வெள்ளிக்கிழமை) - மூத்தவர்கள் மற்றும் அங்கவீனர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.
- வார இறுதி நாட்களுக்கான "நீர்த்தேக்கங்கள் மற்றும் தோட்டங்களுக்கான குறுந்தூரச் சேவை" (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை)

ஒரு குறுந்தூரச் சேவையிலுள்ள பேருந்துப் பயணமானது ஆபேர்ன் தாவரவியற் பூங்காவில் ஆரம்பித்து அங்கேயே முடிவடையும்.

பேருந்தில் 2 சக்கரநாற்காலிகளை மாத்திரம் வைப்பதற்கான இடவசதி உள்ளது. நீங்கள் ஒரு சக்கரநாற்காலியை உபயோகிப்பவராகவிருந்து, அதனை பேருந்தில் கொண்டு செல்ல வேண்டுமாகவிருந்தால், தயவுசெய்து உங்களது பயணத்திற்கு முன்னர் சபைக்கு அழைத்து அதற்கான முன்பதிவு செய்துகொள்ளவும்.

மூத்தோர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் பேருந்தில் அமர்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும். இருப்பினும், பேருந்தில் இருக்கைகள் காலியாக இருக்குமாயின் ஏனைய மக்களும் பேருந்துச் சேவையினை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

நீங்கள் குறுந்தூரப் பயணப் பேருந்துச் சேவைக்கான நேர அட்டவணையினை சபையின் சமுதாய நிலையங்கள், நூலகங்கள் மற்றும் வாடிக்கையாளர் தொடர்பு நிலையங்கள் அல்லது இணையத்தளம் ஆகியவற்றினூடாக அறிந்துகொள்ள முடியும்.

**தொடர்பு: 8757 9031**

## ஊட்டச் சத்துள்ள உணவுச் சேவைகள் (உணவுகள்)

சபையானது கம்பலாந்துப் பிரதேசத்திலுள்ள 65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் புதிதான, இல்லத்தில் தயாரிக்கப்படுகின்ற உணவுகளை வழங்குகிறது. இந்தச் சேவையானது உங்களது உணவுக் கட்டுப்பாட்டுத் தேவைகளுக்கேற்ப நெகிழ்வுத் தன்மை கொண்டதாகும்.

இது பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு குறித்த இலக்கத்திலுள்ள சேவை அபிவிருத்திக் குழுவினைத் தொடர்புகொள்ளவும்.

**தொடர்பு: 8757 9041**





## உடல் ஆரோக்கியமும் 55 இற்கும் மேற்பட்டவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும்

சபையின் சமூக உள்ளடக்கக் குழுவானது கம்பலாந்துப் பிரதேசம் முழுவதும் 55 இற்கும் மேற்பட்டவர்களுக்கு அனேக நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகிறது.

இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- 50 வயதிற்கும் மேற்பட்ட பூர்வீக குடிமக்கள் மற்றும் டொரஸ் ஸ்ரெயிட் தீவினைச் சேர்ந்தவர்களுக்கான நூல் வேலைப்பாட்டுக் குழு.
- கனிவான உடற்பயிற்சிக் குழுக்கள்
- சமூக ரீதியான வெளிப்பயணங்கள்
- கடைக்குச் செல்வதற்கான உதவி, இல்ல விஜயம் மற்றும் முன்பதிவு பெற்ற சந்திப்புகளுக்குச் செல்வதற்கான ஆதரவு
- சபையினால் இயக்கப்படுகின்ற அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களுக்குமான போக்குவரத்து உதவி

**தொடர்பு: 8757 9041**

## அங்கவீனமுற்ற மக்களுக்கான சமூக ரீதியான ஆதரவு

சபையின் வாழ்க்கைமுறை மற்றும் பொழுதுபோக்கு இணைப்பு நிகழ்ச்சித்திட்டமானது அங்கவீனமுற்ற மக்களுக்கு அனேக வெளிப் பயணங்கள் மற்றும் செயற்பாடுகளை வழங்குவதோடு, அவர்களின் பராமரிப்பாளர்களுக்கு ஓய்வெடுப்பதற்கான வாய்ப்பினையும் வழங்குகிறது.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

- குழுச் செயற்பாடுகள்
- வார இறுதி நாட்களிலும் வார நாட்களின் இரவு வேளைகளிலும் வெளிச் செல்லும் பயணம்
- பராமரிப்பாளர்களுக்கான ஓய்வு வசதி
- சபையினால் நடத்தப்படுகின்ற அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களுக்குமான போக்குவரத்துச் சேவை

**தொடர்பு: 8757 9041**



## மூத்த குடிமக்களின் வசதிக்கேற்ற இல்லம்



கம்பலாந்துச் சபையானது, வசதியான மற்றும் அணுகல் வசதிமிக்க தங்குமிடத்தினை, குறித்த வசதி தேவையான மூத்த குடிமக்களுக்கு வழங்கும் வகையில் 76 சுய பராமரிப்பு இல்ல அலகுகளைக் கொண்டுள்ளது.

இந்த இல்ல அலகுகள் அலங்கார அறை (ஒரு தனியான குடியிருப்பாளருக்கு ஏற்றது) மற்றும் ஒரு படுக்கை அறை (அதிகபட்சம் இரண்டு குடியிருப்பாளர்களுக்கு ஏற்றது) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**தொடர்பு: 8757 9000**



## தன்னார்வச் சேவை

கம்பலாந்துச் சபையின் தன்னார்வலர்கள் நிகழ்ச்சித்திட்டமானது, உள்நாட்டுக் குடியிருப்பாளர்கள் சபையின் பல்வேறு செயற்பாடுகளிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்பினை அவர்களுக்கு வழங்குகிறது.

நூலகங்கள், சமூதாய நிலையங்கள், பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள், நிருவாக மற்றும் சமுதாய நிகழ்வுகள் போன்றன உள்ளிட்ட அனேக விடயங்களில் தன்னார்வச் சேவைக்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

பல்வேறு வகையான தன்னார்வச் சேவை நிலையங்கள் பற்றியும் அதற்காக விண்ணப்பிக்கும் முறை பற்றியும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள சபையின் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.

**தொடர்பு: 8757 9000**

## ஆயுட்கால கற்றல் நிகழ்ச்சித்திட்டம்



ஒவ்வொரு தவணையிலும், சபையானது இலவசமும் வசதியும் மிக்கதொரு புதிய நிகழ்ச்சித்திட்டத்தினை உள்நாட்டுக் குடியிருப்பாளர்களுக்கு வழங்குகிறது. இந்தச் செயற்பாடுகள் கொண்டுள்ள விடயங்கள் பின்வருமாறு:

- உடல் ஆரோக்கியம், உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்கு
- உணவு மற்றும் கலாசாரம்
- கல்வி மற்றும் கற்றல்கள்
- ஆக்கபூர்வமான கலை அம்சங்கள்
- சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

சபையின் எந்தவொரு நூலகம், சமுதாய நிலையம் அல்லது எமது வாடிக்கையாளர் தொடர்பு நிலையம் ஆகியவற்றிலிருந்து ஆயுட்கால கற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதி ஒன்றை பெற்றுக்கொள்ளவும்.

நீங்களும் இந்த நிகழ்ச்சித்திட்டங்களை இயங்கலையில் பார்வையிட்டு அதற்கான முன்பதிவினை மேற்கொள்ளலாம்: **cumberland.nsw.gov.au/lifelonglearning**

## மானியங்கள்

நாங்கள் உள்நாட்டு அமைப்புகளுக்கும் சமுதாயக் குழுக்களுக்கும் அனேக மானியங்களையும் நிதி வாய்ப்புக்களையும் வழங்கி உதவுகின்றோம். கிடைக்கத்தகு வாய்ப்புக்கள் பற்றிய புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் எமது மாதாந்த மானியங்கள் பற்றிய செய்திமடலைப் பார்வையிட எமது இணையத்தளத்தில் பதிவுசெய்துகொள்ளவும்.

**www.cumberland.nsw.gov.au/grants**





## சமுதாய தோட்டங்கள்

கம்பலாந்தில் மூன்று அழகிய தோட்டங்கள் காணப்படுகின்றன (அவை ஆபேர்ன், மெரிலான்ட்ஸ் மற்றும் வென்ட்வோர்த்வில் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.)

குடியிருப்பாளர்களின் குழுக்கள் வாராந்தம் ஒன்றிணைந்து தோட்டங்களைப் பராமரித்து வருவதோடு, பழங்கள், மரக்கறிகள் மற்றும் மூலிகைகள் போன்ற பயிர்களையும் வளர்த்து வருகின்றனர். உங்களது தோட்டச் செய்கை பற்றிய ஆற்றல்களை நீங்கள் வளர்த்துக்கொள்ளும் வகையில் பல்வேறுபட்ட தோட்டக்கலை

பற்றிய செயலமர்வுகளும் இடம்பெறுகின்றன.

**வென்ட்வோர்த்வில் சமுதாயத் தோட்டம்:**
**wentworthvillecommunitygarden.com.au**

**ஆபேர்ன் நட்புநேயத் தோட்டம்: 8757 9028**
**மெரிலான்ட்ஸ் தோட்டம்: 8757 9000**

## இளைஞர் நிகழ்ச்சித்திட்டங்கள்

கம்பலாந்துச் சபையானது 12 – 18 வயது வரையான இளைஞர்களுக்கான பல்வேறு சேவைகளை வழங்குகிறது.

ஒவ்வொரு வாரமும் இளைஞர்களுக்கான இலவச செயற்பாடுகள் காணப்படுகின்றன.

- குறுங்கால ஒன்றுகூடல் அமர்வுகள்
- வெளிப் பயணம் செல்லல்
- நிகழ்வுகள்
- பாடசாலைக் காலத்தில் கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்
- வீட்டுப் பயிற்சி உதவி
- தொழில் ஆதரவு
- உடல் ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
- இசை நிகழ்ச்சிகள்



## பாடசாலை விடுமுறை நிகழ்ச்சித்திட்டம்

ஒவ்வொரு பாடசாலை விடுமுறைகளிலும் சபையானது 5 முதல் 18 வயது வரையான சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான இலவச மற்றும் வயது அடிப்படையிலான பல்வேறு செயற்பாடுகளை வழங்குகிறது. இவற்றில் வெளிப் பயணங்கள், குடும்ப கேளிக்கைத் தினங்கள், விளையாட்டுக்கள் மற்றும் வரைதல்/கைவினைச் செயற்பாடு சார்ந்த செயலமர்வுகள் போன்றன உள்ளடக்குகின்றன. நீங்கள் உங்களது கையேட்டினை எமது எந்தவொரு நூலகங்களில் அல்லது ஆபேர்னிலுள்ள அல்லது மெரிலான்ட்ஸிலுள்ள வாடிக்கையாளர் தொடர்பு நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது அதனை சபையின் **cumberland.nsw.gov.au/school-holidays.** எனும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம்செய்து பெற்றுக்கொள்ள முடியும். சந்தர்ப்பத்தை இழக்காதிருக்க முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.





## தடுப்பூசி வழங்கல்

தடுப்பூசியினால் தடுக்கக் கூடிய நோய்களுக்கு எதிராக சிறுவர்களையும் சமுதாயத்தினையும் பாதுகாக்கும் நோக்கில், சபையானது 6 வாரங்கள் முதல் 5 வருடங்கள் வரையான வயதுடைய சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் சேவையினை இலவசமாக சுமார் 60 வருடங்களுக்கும் கூடுதலான காலமாக முன்னெடுத்து வருகிறது.

**தொடர்பு: 8757 9642**

## எங்களைப் பின்பற்றவும்

facebook

instagram

linkedin



## நீண்டகால பராமரிப்பு



கம்பலாந்துச் சபையானது பிள்ளையின் பிறப்பு முதல் பாடசாலை வயது வரையான பராமரிப்புக்காக எட்டு நீண்டகால பராமரிப்பு நிலையங்களை இயக்கி வருகின்றது. இந்த நிலையங்கள் சிறுவர்களுக்கான ஊக்குவிப்புமிக்கதும் பாதுகாப்பு மிக்கதுமானதொரு சூழலை வழங்குவதோடு, இது சிறுவர்கள் பாடசாலைச் சூழலுக்குள் இலகுவாக மாறுவதற்கு ஏற்ற வகையிலும் அமைந்துள்ளது.

சபையின் மேற்படி நிலையங்கள் தேசிய தர நியமங்களுக்கு இசைவாகக் காணப்படுவதோடு, ஒவ்வொரு சிறுவர்களின் தேவைகளுக்கும் ஏற்ற வகையிலான தரமான சேவைகளை வழங்குகிறது. நீண்ட நாள் பராமரிப்பு வசதியானது பிள்ளைகளின் தேவைகளை எதிர்கொள்வதை நோக்காகக் கொண்டதொரு கல்வி-மைய முன்பள்ளி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதோடு, மேலதிக கற்றல்களை வழங்குவதற்கும் பாடசாலைக்குச் செல்வதற்கு பிள்ளைகளை தயார்படுத்துவதற்குமான ஊக்கத்தினை வழங்குகிறது.



## அவ்வப்போது பராமரிப்பு

சபையின் சந்தர்ப்ப கால நிலையமானது விசேட (சந்தர்ப்பம் சார்ந்த) பராமரிப்பினை வழங்குகிறது. இது நேரகாலத்துடன் முன்பதிவுசெய்யப்படல் வேண்டுமென்பதோடு, இது பகுதி நேரம் அல்லது தற்காலிகமாக பணியாற்றுகின்ற, கல்வி பயிலுகின்ற அல்லது சந்திப்புகளுக்குச் செல்கின்ற குடும்பத்தினருக்குப் பொருத்தமானதாகும். இந்த நிலையமானது உள்நாட்டு சமுதாயத்தின் தேவைகளை எதிர்கொள்ளும் வகையிலான பல்வேறுபட்ட கற்றலுக்கானதொரு சூழலை வழங்குகிறது. இது பாடசாலை வயது வரையான பிள்ளைகள் 30 நிமிடங்கள் முதல் ஒரு முழு நாள் வரையும், பாதுகாப்பும் பத்திரப்படுத்தலும் மிக்க, இல்லத்திற்கு ஒப்பான சுற்றாடல் ஒன்றில் இருக்கக்கூடியவாறான நெகிழ்வுத் தன்மைமிக்க சேவையொன்றினை வழங்குவதன் முலம் அடையப்பட்டதாகும்.

## குடும்ப பகல்நேர பராமரிப்பு



கம்பலாந்துச் சபையின் குடும்ப பகல்நேர பராமரிப்பானது அங்கீகாரம் பெற்ற, பதிவுசெய்யப்பட்ட குடும்ப பகல்நேர பராமரிப்புக்கான கற்பிப்போரின் பிரத்தியேக இல்லத்தில் 13 வயது வரையான சிறுவர்களுக்கான தொழில்வாண்மையும் மேற்பார்வையும் மிக்க பராமரிப்பினை வழங்குகின்ற தரமான கல்வி மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவையினைக் கொண்டதாகும். குடும்ப பகல்நேர பராமரிப்புச் சேவையானது, பாதுகாப்பும் ஊக்கமும் மிக்க இல்லம் சார்ந்ததொரு சுற்றாடலில் சிறுவர்களுக்கான தரமான பராமரிப்பினை உயர்வான நியமதரத்தில் வழங்கும் நோக்கில் சபையினால் முகாமைத்துவம் செய்யப்படுகிறது.

குடும்ப பகல்நேர பராமரிப்புச் சேவையானது நெகிழ்வுத்தன்மையுடைய பராமரிப்பு நேரத்தினைக் கொண்டுள்ளதோடு, நேரமாற்ற பணியாளர்கள், கடமையிலுள்ள தொழிலாளர்கள், கலாசார மற்றும் மொழி ரீதியில் வேறுபட்ட பின்புலத்தைச் சேர்ந்த தனியான பெற்றோர் மற்றும் பெற்றோர்கள் போன்றோர் உள்ளிட்ட அனைத்துக் குடும்பத்தினருக்கும் ஏற்ற பல கலாசாரத்தைச் சேர்ந்த கற்பிப்போர்களையும் கொண்டுள்ளது.

# பாடசாலை நேரம் தவிர்த்த பராமரிப்பு (OOSH)



கம்பலாந்து உள்நாட்டு அரசாங்கப் பிரதேசம் மற்றும் சுற்றுப்புறப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலைக்குச் செல்கின்ற பாலர் வயது முதல் 13 வயது வரையான சிறுவர்களுக்கு ஏதுவான பாடசாலைக்குச் செல்வதற்கு முன்னரும் மற்றும் பாடசாலை நேரத்தின் பின்னருமான ஏழு பராமரிப்பு நிலையங்களை இயக்கி வருகிறது. இந்த நிலையங்கள் பாதுகாப்பான சுவாரஸ்யமானதொரு சுற்றாடலில் மேற்கொள்ளக்கூடிய பல்வேறு பொழுதுபோக்குச் செயற்பாடுகளைக் வழங்குகின்றன. சிறுவர்கள் விளையாட்டு, சித்திரம் மற்றும் கைவினை, குழு விளையாட்டுக்கள் அல்லது அமைதியான விளையாட்டுக்கள் ஆகியவற்றில் தாம் விருப்பியவற்றைத் தெரிவுசெய்து கொள்ள முடியும்.

மேலும் சபையானது அதன் நான்கு கல்வி மற்றும் பராமரிப்பு நிலையங்களில் பாடசாலை விடுமுறைப் பராமரிப்பினை வழங்குகிறது. சிறுவர்களுக்கான சேவைகள் பற்றிய பாடசாலை விடுமுறை நிகழ்ச்சித்திட்டமானது பொழுதுபோக்கு மற்றும் கல்வி சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்தான கிளர்ச்சியூட்டும் வகையிலான செயற்பாடுகள், தொனிப்பொருள் மிக்க தினங்கள், வெளிப்பயணங்கள் மற்றும் செயலமர்வுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இது பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு தயவுசெய்து சபையின் இணையத்தளத்தினைப் பார்வையிடவும் அல்லது **8757 9000.**

---



# எழுத்தறிவு சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள்

0 முதல் 5 வயதிற்கு இடைப்பட்டவர்களது அடிமட்ட திறன்கள்களைக் கொண்டு பாடசாலையில் எழுத்தறிவுத் திறன்களை விருத்திசெய்வது முக்கியமானது என ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது. பெயின்ட் கம்பலாந்து REaD என்பது கம்பலாந்தின் உள்நாட்டு அரசாங்கப் பிரதேசத்தில் வழங்கப்படுகின்ற, சமுதாய எழுத்தறிவுத் திறனைக் கட்டியெழுப்புவதற்கானதொரு நிகழ்ச்சித்திட்டமாகும். சிறுவர்களின் ஆரம்பகால எழுத்தறிவு திறன்களை பிறப்பிலிருந்து அபிவிருத்தி செய்வதற்கு உதவும் வகையில் சமுதாயத்தின் அனைத்து மட்டங்களையும் ஊக்குவிப்பதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். இது சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பிக்கும் போது, அவர்கள் எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான திறமைகளைக் கொண்டிருப்பதற்கு வழியமைக்கின்றது.

சபையின் எழுத்தறிவுச் சின்னமாக பாப்பி த போசம் விளங்குவதோடு, இது சேவைகள், பூங்காக்கள், பொது இடங்கள் மற்றும் சிறுவர்களுக்கான கதைகளை வாசிப்பதற்கான உள்நாட்டுப் பிரதேசங்களை வழங்கி வசதியளிக்கிறது. மேலதிக தகவல்களுக்கும் பாப்பி த போசம் நிகழ்வில் கலந்துகொள்வதற்கும் சபையின் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.

---

# புஷ் பாடசாலை - மத்திய தோட்டங்கள், மெரிலான்ட்ஸ்



புஷ் பாடசாலையில் காணப்படுகின்ற இயற்கையுடன் கூடிய வெளிப்புறச் சுற்றாடல் ஒன்றில் சிறுவர்களின் கல்வி சார்ந்த அமர்வுகளுக்கு சிறுவர்களின் சேவைகள் வசதியளிக்கின்றன. இந்த நிகழ்ச்சிகள் வேடிக்கைமிக்க கதைகள் மற்றும் பாடல்கள், சபையின் எழுத்தறிவுச் சின்னமான பப்பி த போசத்திலிருந்தான சமுகமளிப்பு மற்றும் மத்திய தோட்டங்களின் விலங்கு அடைப்புகளுக்குச் செல்லல் போன்றவற்றைக் கொண்டதாகும். இந்த புஷ் பாடசாலையானது எழுத்தறிவு மற்றும் செயற்பாடுகளினூடான சுற்றாடல் மற்றும் இயற்கை சார்ந்ததொரு புரிந்துணர்வு மற்றும் பாராட்டுதல்களை வழங்கும் வகையிலான அனுபவங்களைக் கொண்டுள்ளது.

இந்த அமர்வு பற்றிய மேலதிக தகவல்களுக்கு அல்லது இந்த புஷ் பாடசாலையில் உங்களது அமர்வினை முன்பதிவுசெய்து கொள்வதற்கு தயவுசெய்து தொடர்புகொள்ளவும் **childrens.services@cumberland.nsw.gov.au**.

## சமுதாய நிலையங்கள்

சபையானது பிரதேசம் முழுவதுமுள்ள பல்வேறு இடங்களில் 19 பல்வேறுபட்ட சமுதாய நிலையங்களைக் கொண்டுள்ளது. இவற்றில் பின்வரும் நான்கு சமுதாய நிலையங்களில் சபையின் ஊழியர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்:

- சமுதாயத்திற்கான ஆபேர்ன் நிலையம்
- பெரலா சமுதாய நிலையம்
- கிரான்வில இளைஞர் மற்றும் சமுதாய பொழுதுபோக்கு நிலையம்
- கில்ட்போட் சமுதாய நிலையம்

சபையும் ஏனைய அமைப்புகளும் இந்த இடங்களிலிருந்து பல்வேறுபட்ட அனேக நிகழ்ச்சித்திட்டங்களையும் சேவைகளையும் இயக்கி வருகிறது. தனிப்பட்ட குடியிருப்பாளர்களும் சிறிய குழுக்கள், தரப்புக்கள், சமுதாய கொண்டாட்டங்கள் மற்றும் இன்னோரன்ன நிகழ்வுகளுக்காக இந்த நிலையங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.





## பிராந்தியப் பூங்காக்கள்

நீங்கள் விஜயம் செய்யக்கூடிய மூன்று பாரிய பிராந்திய பூங்காக்கள் காணப்படுகின்றன.

- ஆபேர்ன் தாவரவியற் பூங்கா
- மத்திய தோட்டங்கள், மெரிலான்ட்ஸ் மேற்கு
- ஹொல்றொயிட் தோட்டங்கள், மெரிலான்ட்ஸ்

ஒவ்வொரு பூங்காவும் வேறுபட்ட அம்சங்களைக் கொண்டு திகழ்கின்றது. இருப்பினும், இயற்கையான விலங்கு அடைப்புகள், இயற்கையான தோட்டங்கள், வட்டவடிவ அரங்கு ஒன்று, குளங்கள் மற்றும் நீர் சார்ந்த அம்சங்கள், சாகசம் மிக்க விளையாட்டு மைதானங்கள், BBQ மற்றும் சுற்றுலா பிரதேசங்கள், நடைப் பயிற்சிப் பாதைகள், ஒரு துவிச்சக்கர வண்டிப் பாதை மற்றும் இன்னும் பல விடயங்களுடன் கூடிய விசேட அம்சங்களைக் கொண்டிருக்கலாம்!

## விளையாட்டு மைதானங்கள், ரென்னிஸ் மற்றும் கோல்ப் திடல்கள்

கம்பலாந்து நகர் எங்கும் சுமார் 45 விளையாட்டு மைதானங்களும் 26 ரென்னிஸ் திடல்களும் காணப்படுவதோடு இவற்றை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும் முடியும். இந்த வசதிகளில் கிறிக்கெட், கால்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், AFL, ரக்பி மற்றும் சைக்கிள் ஓட்டம் போன்றன காணப்படுகின்றன. உங்களுக்கான இரண்டு கோல்ப் திடல்களும் காணப்படுகின்றன.
**வரைபடப் பக்கம் 18 ஐ பார்க்கவும்.**



# நீச்சல் தடாக நிலையங்களும் நீச்சலுக்கான கற்றலும்

கம்பலாந்தில் ஐந்து நீச்சல் தடாகங்கள் காணப்படுகின்றன. நீங்கள் நீச்சலைக் கற்றுக்கொள்ள வேண்டுமாயின், அதற்கான வகுப்புக்களில் நீங்கள் இணைந்துகொள்ள முடியும்.

இவை லிட்கம், மெரிலான்ட்ஸ், கிரான்பில, கில்போட் மற்றும் வென்ட்வோர்த்வில போன்றவற்றில் அமைந்துள்ளன.





# பூங்காக்களும் விளையாட்டு மைதானங்களும்

நீங்கள் விளையாடி இன்புறுவதற்கும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கும் கம்பலாந்தில் உங்களுக்கு விளையாட்டு

மைதானங்களும் பல பூங்காக்களும் உள்ளன. **வரைபடப் பக்கம் 18 ஐ பார்க்கவும்.**

# மேலும் கண்டறிதல் மற்றும் முன்பதிவு செய்தல்

நீங்கள் சமுதாய நிலையங்கள் பற்றி அல்லது விளையாட்டு வசதி பற்றி மேலும் அறிய விரும்பினால், அது பற்றி சபையின் இணையத்தில் பார்வையிடவும்.
**cumberland.nsw.gov.au/venues-hire**

நீங்கள் ஒரு நிலையத்தினை முன்பதிவு செய்வதற்கு, தயவுசெய்து சபையின் முன்பதிவுக் குழுவினைத்

தொடர்புகொள்ளவும்: **8757 9000**

பொது வசதியின் வாடகை:
**bookings@cumberland.nsw.gov.au**

பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களின் வாடகை:
**park.bookings@cumberland.nsw.gov.au**

CUMBERLAND
CITY COUNCIL



# உள்நாட்டு குடியிருப்பாளர்களுக்கான
# சபையின் சேவைகள்

புகையிரத நிலையம்

புகையிரதப் பாதை

எம்4 வாகனப் பாதை

உள்ளூர் வீதி

பிராந்திய வீதி

சபையின் எல்லை

வென்ட்வோர்த்வில தொகுதி

கிரேய்ஸ்ரான்சஸ் தொகுதி

கிரான்வில தொகுதி

தெற்கு கிரான்வில தொகுதி

ரெஜண்ட்ஸ் பார்க் தொகுதி

சபையின் அலுவலகம்

சமுதாய தோட்டம்

சமுதாய நிலையம்

சமுதாய/தொழிற்பாட்டு நிலையங்கள்

பிராந்தியத் தோட்டம்

நூலகம்

கலைக் கூடம்

கல்வி மற்றும் பராமரிப்புச் சேவைகள்

ரெனிஸ் திடல்

நீச்சல் தடாகம்

விளையாட்டு மைதானம்

கோல்ப் களகம்



### சபை அலுவலகங்கள்
1. Council office in Merrylands (16 Memorial Avenue, Merrylands)
2. Council office in Auburn (Civic Place, 1 Susan Street, Auburn)

### சமுதாயத் தோட்டங்கள்
3. Auburn Centre for Community
4. Merrylands Community Garden
5. Wentworthville Community Garden

### சமுதாய நிலையங்கள்
6. Auburn Centre for Community
7. Berala Community Centre
8. Granville Youth and Community Recreation Centre
9. Guildford Community Centre

### சமுதாய/தொழிற்பாட்டு நிலையங்கள்
10. Auburn Town Hall
11. Domain Community Rooms
12. Granville Town Hall
13. Greystanes Community Centre
14. Linnwood House
15. Lidcombe Community Centre
16. Holroyd Centre
17. Merrylands Community Centre
18. Merrylands Park Function Hall
19. Nemesia Street Hall
20. Pemulwuy Community Centre (Alan G Izzy Community Centre)
21. Redgum Centre at Wentworthville
22. Regents Park Community Centre and Community Hub
23. Toongabbie Community Centre
24. Wentworthville Community Centre

### பிராந்திய தோட்டங்கள்
25. Auburn Botanic Gardens (Fauna Park)
26. Holroyd Gardens
27. Central Gardens Merrylands (Fauna Park)

### நூலகங்கள்
28. Auburn Library
29. Granville Library
30. Greystanes Library
31. Guildford Library
32. Lidcombe Library
33. Merrylands Library
34. Regents Park Library
35. Wentworthville Library and Toy Library

### கலைக்கூடம்
36. Peacock Gallery and Auburn Arts Studio

### கல்வி மற்றும் பராமரிப்புச் சேவைகள்
37. Auburn Long Day Child Care Centre
38. Cumberland Council Family Day Care
39. Frances Fisk Child Care Centre
40. Friend Park Children's Centre
41. Guildford West Children's Centre
42. Holroyd Children's Centre Banksia Babes
43. Holroyd Children's Centre Gumnut Grove
44. Guildford West OOSH
45. Parramatta West OOSH
46. Pemulwuy Children's Centre
47. Pemulwuy OOSH
48. Pendle Hill OOSH
49. The Sometime Centre
50. Ringrose OOSH
51. Sherwood Grange OOSH
52. Wenty Children's Centre
53. Widemere OOSH

### ரெனிஸ் திடல்கள்
54. Bathurst Street Park, Greystanes
55. Byrnes Street, South Granville
56. Central Gardens, Merrylands
57. Civic Park, Pendle Hill
58. Dirrabarri, Pemulwuy
59. Fullagar Road, Wentworthville
60. Greystanes Sports Ground, Greystanes
61. Guildford West, Foray Street, Guildford West
62. Lawson Square, Merrylands
63. Merrylands Park, Merrylands

### நீச்சல் தடாகங்கள்
64. Granville Pool
65. Guildford Pool
66. Merrylands Pool
67. Ruth Everuss Pool
68. Wentworthville Pool

### விளையாட்டு மைதானங்கள்
69. Alpha Road Park
70. Bathurst Street Park
71. Bright Park
72. Coleman Park
73. Colquhoun Park
74. CV Kelly Park
75. Daniel Street Park
76. Darling Street Park
77. Everley Park
78. Fairfield Road Park
79. Freame Park
80. Gipps Road Park
81. Girraween Park
82. Granville Park
83. Greystanes Sportsground
84. Guildford Park
85. Guildford West Sportsground
86. Guilfoyle Park
87. Harold Read Park
88. Harry Gapes Reserve
89. Holroyd Sportsground
90. Horlyck Reserve
91. King Park
92. Lidcombe Oval
93. Long Street Park
94. MJ Bennet Reserve
95. Merrylands Park
96. Mona Park
97. Monty Bennett Oval
98. Nemesia Street Park
99. Norford Park
100. Oriole Park
101. Peter Hislop Park
102. Pendle Hill Park
103. Phillips Park
104. Princes Park
105. Progress Park
106. Ray Marshall Reserve
107. Roberta Street Park
108. Sydney Smith Park
109. Tait Street Park
110. Ted Burge Sportsground
111. Tom Uren Park
112. Webbs Avenue Playing Fields
113. Wyatt Park

### கொல்ப் களகங்கள்
114. Woodville Golf Course
115. Rosnay Golf Club



# அறிந்துகொள்ளல்: கலை, கலாசாரம் மற்றும் நிகழ்வுகள்

## பீகொக் காட்சிக்கூடம் மற்றும் ஆபோர்ன் கலை அரங்கு

நீங்கள் கண்காட்சிகளைப் பார்வையிடுவதற்கு, குடும்ப நேயமுடைய கலை அம்சங்களுடனான செயலமர்வுகளில் கலந்துகொள்வதற்கு அல்லது கம்பலாந்து பிரதேசத்தில் வசிக்கின்ற ஏனைய கலைஞர்களின் குழுவுடன் இணைந்துகொள்வதற்கு பீகொக் காட்சிக் கூடத்திற்கு விஜயம் செய்யலாம்.

இது பற்றி மேலதிக தகவல்களை சபையின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகொள்ளவும்: 8757 9029**





## சமுதாய நிகழ்வுகள்

ஒவ்வொரு ஆண்டும் சபையானது உள்நாட்டுக் குடியிருப்பாளர்களுக்கான 50 இற்கும் மேற்பட்ட பாரிய உள்ளூர் நிகழ்ச்சிகளை வழங்குகிறது.

- அவுஸ்திரேலிய தினம்
- சந்திர வருடப் புத்தாண்டு
- செரி மலர்ப் பண்டிகை
- தீபவளிப் பண்டிகை
- காட்சிக்குரிய இடம் சார்ந்த பண்டிகை

...அத்துடன் இன்னும் பல

நீங்கள் உங்களுக்கு அருகிலுள்ள இடத்தில் அண்மையில் இடம்பெறவுள்ள நிகழ்வுகள் பற்றி அறிந்துகொள்வதற்கு சபையின் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.

# அறிந்துகொள்ளல்: நூலகங்கள்

## இலவசமாக இணைந்து ஒரு நூலக அனுமதி அட்டையினைப் பெற்றுக்கொள்ளல்

கம்பலாந்துச் சபையின் நூலகச் சேவையில் அனைத்து உள்ளூர் குடியிருப்பாளர்களும் இலவசமாக இணைந்துகொள்ளலாம்.

நீங்கள் உங்களது உள்ளூர் நூலக கிளைக்கு சமுகமளித்து உங்களது குடியிருப்பு விலாசத்தினை உறுதிப்படுத்தும் மூல அடையாளத்தினை வழங்கி இதில் இணைந்துகொள்ள முடியும். இதன்போது அவ்விடத்திலேயே உங்களுக்கு நூலக அனுமதி அட்டை வழங்கப்படும். இந்த அட்டையினை உபயோகித்து கம்பலாந்துச் சபையின் எந்தவொரு நூலகத்திலும் புத்தகங்களை இரவலுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

பொருத்தமான அடையாள அட்டைகளாக பின்வருவன விளங்குகின்றன:

- சாரதி அனுமதிப்பத்திரம்
- புகைப்பட ஆளடையாள அட்டை
- சுகாதார பராமரிப்பு அட்டை
- கட்டணப் பட்டியல் அல்லது வங்கி இணக்கக்கூற்று (3 மாதங்களுக்குள் பெறப்பட்டவை)
- வாடகை உடன்படிக்கை





## எந்தவொரு நூலகத்திலும் உங்களால் செய்யக்கூடியவை யாவை?

நூலகத்தில், உங்களால்:

- புத்தகங்கள், DVD கள், இசை மற்றும் இன்னும் பலவற்றை இலவசமாக இரவலுக்குப் பெற்றுக்கொள்ள முடியும்
- பல்வேறு சமுதாய மொழிகளிலான புத்தகங்களை இரவலுக்குப் பெற்றுக்கொள்ள முடியும்
- கணினிகளை இலவசமாக உபயோகிக்க முடியும்
- WiFi வசதியை உபயோகிக்க முடியும்
- வாசிப்பதற்கு அல்லது பாடம் படிப்பதற்கு ஒரு அமைதியான இடத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்
- அச்சுப்பிரதி எடுக்க முடியும் (குறைந்த கட்டணத்தில்)
- ஆய்வுகள் தொடர்பில் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்

## சிறுவர்கள் மற்றும் குடும்பத்தினருக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

சபையின் நூலகத்தில் பல்வேறு கிரம அடிப்படையிலான இலவச நிகழ்ச்சித்திட்டங்கள் சிறுவர்களுக்கும் குடும்பத்தினருக்குமாக காணப்படுகின்றன. இவற்றில் பின்வருன உள்ளடங்குகின்றன:

- ஆரம்ப மற்றும் உயர் பாடசாலை மாணவர்களுக்கான வீட்டுப் பயிற்சி உதவி
- பாடசாலை நேரத்தின் பின்னர் கைவினைச் செயற்பாடு
- சக நண்பனுடன் இணைந்து வாசித்தல்
- குழந்தை மற்றும் தவழும் குழந்தைகளுக்கான மழலைப் பாடல் நேரக் குழுக்கள்
- பாடசாலை விடுமுறை நிகழ்ச்சித்திட்டங்கள்



## வயது வந்தவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

சபையின் நூலகத்தில் வயது வந்தவர்களுக்கான அனேக இலவச நிகழ்ச்சித்திட்டங்கள் வார நாட்களில் இடம்பெறுகின்றன. இவற்றில் பின்வருவன உள்ளடங்குகின்றன:

- ஆங்கில உரையாடல் வகுப்பு
- படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கான உதவி
- பிரத்தியேக தொழில் தேடல் உதவி
- சமாதான நீதவான் சேவைகள்
- அவுஸ்திரேலிய குடியுரிமை பற்றிய செயலமர்வு
- பிரத்தியேக உதவியுடன் கூடிய கணினி அமர்வுகள்
- நூல் கழகங்கள், மூவி கழகங்கள் மற்றும் கவிதை மற்றும் எழுத்தாளர் குழுக்கள் போன்ற சமூகக் குழுக்கள்.





## விளையாட்டுப் பொருள் நூலகம்

கம்பலாந்துச் சபையானது வென்ட்வோர்த்வில நூலகத்தில் விளையாட்டுப் பொருள் நூலக சேவை ஒன்றினை வழங்குகிறது. இங்கு நீங்கள் உங்களது குழந்தை விளையாடுவதற்கான விளையாட்டுப் பொருட்களை இரவலுக்குப் பெற்றுக்கொள்ளலாம். விளையாட்டுப் பொருட்களை 11 வயதிற்குக் குறைவான பிள்ளை அல்லது பிள்ளைகள் குழுவிற்காக இரவலுக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.

## உங்களுக்கு அண்மையில் நூலகம் எங்கே உள்ளது?

உங்களது உள்ளூர் நூலகம் வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது சேவைகள் பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு கீழுள்ள கிளை நூலகம் ஒன்றுக்கு அழைப்பு மூலம் தொடர்புகொள்ளவும்.

### ஆபோர்ன் நூலகம்

**இயங்கும் நேரம்:**

காலை. 9.30 – மாலை. 8.00 I திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை வரை
காலை 9.30 – மாலை. 6.00 I வெள்ளிக்கிழமை
காலை. 9.30 – மாலை. 4.00 I சனிக்கிழமை
பி.ப. 1.00 – மாலை. 4.00 I ஞாயிற்றுக்கிழமை

**அமைவிடங்கள்:**

Civic Place, 1 Susan Street, Auburn NSW 2144
வாகனத் தரிப்பிடம்: 2 மணித்தியாலங்களுக்கு இலவசம் - சூசன் வீதி வாகனத் தரிப்பிடம்

**தொலைபேசி: 8757 9060**

### Granville Library

**இயங்கும் நேரம்:**

காலை. 10.00 – மாலை. 8.00 I திங்கட்கிழமை, வியாழக்கிழமை
காலை. 10.00 – மாலை. 5.30 I செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை
காலை. 9.30 – பி.ப. 12.00 I சனிக்கிழமை

**அமைவிடங்கள்:**

8 Carlton Street, Granville NSW 2142
(கிரான்வில நகர மண்டபத்திற்கு அருகில்)

**தொலைபேசி: 8757 9061**

## கிரேய்ஸ்ரான்ஸ் நூலகம்

**இயங்கும் நேரம்:**
காலை. 9.30 – மாலை. 5.30 l திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை
காலை. 9.30 – மாலை. 8.00 l வியாழக்கிழமை
காலை 9.00 – பி.ப. 12.00 l சனிக்கிழமை

**அமைவிடங்கள்:**
732 Merrylands Road, Greystanes NSW 2145

**தொலைபேசி: 8757 9062**

## கில்போர்ட் நூலகம்

**இயங்கும் நேரம்:**
காலை. 10.00 – மாலை. 8.00 l திங்கட்கிழமை, வியாழக்கிழமை
காலை. 10.00 – மாலை. 5.30 l செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை
காலை. 9.30 – பி.ப. 12.00 l சனிக்கிழமை

**அமைவிடங்கள்:**
Railway Terrace, Guildford NSW 2161

**தொலைபேசி: 8757 9063**

## லிட்கம் நூலகம்

**இயங்கும் நேரம்:**
காலை. 9.30 – மாலை. 5.00 l திங்கட்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை
காலை. 10.00 – மாலை. 6.00 l செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை
காலை. 9.30 – பி.ப. 12.00 l சனிக்கிழமை

**அமைவிடங்கள்:**
Bridge Street, Lidcombe NSW 2141

**தொலைபேசி: 8757 9064**

## மெரிலான்ட்ஸ் நூலகம்

**இயங்கும் நேரம்:**
காலை. 9.30 – மாலை. 8.00 l திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை
காலை. 9.00 – மாலை. 4.00 l சனிக்கிழமை
பி.ப. 2.00 – மாலை. 5.00 l ஞாயிற்றுக்கிழமை

**அமைவிடங்கள்:**
மில்லர் மற்றும் நியூமன் தெருக்களின் மூலைகள் , மெர்ரிலான்ட்ஸ், நியு சவுத் வேல்ஸ் 2160

**தொலைபேசி: 8757 9065**

## ரெஜண்ட்ஸ் பார்க் நூலகம்

**இயங்கும் நேரம்:**
காலை. 10.00 – மாலை. 6.00 l திங்கட்கிழமை, புதன்கிழமை
காலை. 9.30 – மாலை. 5.00 l செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை
காலை. 9.30 – பி.ப. 12.00 l சனிக்கிழமை

**அமைவிடங்கள்:**
1 Amy Street, Regents Park NSW 2143
பார்க்கிங்: நூலகத்தின் பின்னால் 4 மணி நேரங்கள் இலவசமாக வாகனங்களை நிறுத்த முடியும். அவ்விடத்திற்கு ரெஜண்ட்ஸ் தெரு வழியாக அணுக முடியும்

**தொலைபேசி: 8757 9066**

## வென்ட்வோர்த்வில் நூலகம் மற்றும் விளையாட்டுப் பொருள் நூலகம்

**இயங்கும் நேரம்:**
காலை 9.30 – மாலை. 5.30 l திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை
காலை. 9.30 – மாலை. 8.00 l வியாழக்கிழமை
காலை. 9.00 – மாலை. 4.00 l சனிக்கிழமை

**அமைவிடங்கள்:**
2 Lane Street, Wentworthville NSW 2145

**தொலைபேசி: 8757 9067**
**விளையாட்டுப் பொருள் நூலகம்: 8757 9068**

லான் வீதி நுழைவாயிலுக்கு அருகில் 24 மணிநேர நூல் மீள ஒப்படைப்புச் சேவை காணப்படுகிறது




# உங்களது கருத்துக்களைக் கூறுங்கள்

## சபையின் கூட்டங்கள்

சாதாரண சபைக் கூட்டங்கள் மெரிலான்ட்ஸ் நிர்வாகக் கட்டடம், 16 மெமோறியல் அவனியு மெரிலான்ட்ஸ் எனும் விலாசத்தில் ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் (ஜனவரி மாதம் நீங்கலாக) மாலை 6.30 மணிக்கு இடம்பெறுகின்றன. கூட்டங்களுக்கான அனைத்துத் தினங்கள் மற்றும் அலுவலகப் பத்திரங்கள் போன்றன பற்றிய தகவல்களை சபையின் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எந்தவொரு பொதுமக்கள் உறுப்பினரும் சபையின் கூட்டத்திற்கு கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர். நீங்கள் கூட்ட நடவடிக்கைகளை சபையின் இணையத்தளத்தினூடாகவும் பார்வையிட முடியும்.

நீங்கள் கலந்துரையாடலுக்காக சபையிலுள்ளதொரு அறிக்கை தொடர்பில் சபையில் உரையாற்ற விரும்பினால், சபையில் உரையாற்றுவதற்கான கோரிக்கைப் படிவம் ஒன்றை பூரணப்படுத்தி வழங்குமாறு நிங்கள் வேண்டப்படுகின்றீர்கள் (இதனை சபையின் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்).

இந்தப் படிவமானது கண்டிப்பாக சபையின் கூட்ட தினத்தில் மாலை. 2 மணிக்கு முன்னர் சபையினால் பெறப்படுதல் வேண்டும். குறித்த விடயம் தொடர்பில் நீங்கள் 3 நிமிடங்கள் வரை உரையாற்றுவதற்கு அனுமதிக்கப்படுவீர்கள்.

எந்தவொரு சமுதாய உறுப்பினரும் சபை சம்பந்தமான எந்தவொரு தலைப்பிலுமான கேள்விகளையும் சபைக் கூட்டத்தின் பொதுமக்கள் கருத்துமன்றத்தின் போது சபையிடம் முன்வைக்க முடியும்.



## குழுக்கள்

21 ஆலோசனைக் குழுக்கள் காணப்படுவதோடு, இக்குழுக்கள் உள்ளூர் குடியிருப்பாளர்கள், சேவை வழங்குனர்கள் மற்றும் ஏனைய பிரதான பங்கீடுபாட்டாளர்கள் போன்றோரிடமிருந்து பெறுகின்ற அவர்களைப் பாதிக்கும் விடயம் குறித்தான ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை சபைக்கு வழங்குகின்றன. இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது: பூர்வீக குடிமக்கள் மற்றும் டொரஸ் ஸ்ரெயிட் தீவு மக்கள் விடயம், கலாசார நிகழ்வுகள், சமுதாய பாதுகாப்பு, இளைஞர் நிகழ்ச்சித்திட்டங்கள், பூங்காக்கள், வசதிகள் மற்றும் இன்னும் பல விடயங்கள்.

இந்தக் குழுவானது அனைத்துக் குடியிருப்பாளர்களுக்கும் ஏற்புடைய வகையில் மட்டுப்பாடின்றிக் காணப்படுவதோடு, குறித்த சில மூலப்பிரமாணங்கள் மற்றும் கிடைக்கத்தகு இடங்களைப் பொறுத்து முன்பதிவுகள் மேற்கொள்ளப்படமுடியும்.

## சமுதாய ஈடுபாடு

நாங்கள் ஒன்றாக இணைந்து எங்களது சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதன் காரணமாக, சபையானது உங்களது கருத்துக்களைப் பெறும் நோக்கில் தொடர்ச்சியாக வெளிக்கிழம்பி எமது சமுதாயத்துடன் ஈடுபட்டுவருகிறது.

நீங்கள் உங்களது கருத்துக்களைக் கூறுவதற்கு எதிர்வரவுள்ள உங்களுக்கான வாய்ப்புக்கள் என்ன என்பது பற்றி கண்டறிவதற்கு, பார்க்க:
**cumberland.nsw.gov.au/have-your-say**



## உள்ளக ஒம்புட்ஸ்மன் பகிர்வுச் சேவை

**கம்பலாந்து, பரமட்டா நகரம் மற்றும் உள்ளக மேல் சபைகள் ஆகியவற்றுக்கானது**

உள்ளக ஒம்புட்ஸ்மன் பகிர்வுச் சேவையானது சமுதாய அங்கத்தவர்கள், பணியாட்டொகுதியினர், சபை உறுப்பினர்கள் மற்றும் சபையின் ஏனைய பங்கீடுபாட்டாளர்கள் போன்றோருக்கானதொரு "சுயாதீன விசாரணை" சேவை ஆகும். நாங்கள் முறைப்பாடுகளை ஆராய்கின்றோம் (நீங்கள் சபையின் பதிலளிப்பிற்கு உடன்படாத சந்தர்ப்பம் உள்ளடங்கலாக); மீளாய்வு செய்து கொள்கைகளை விருத்திசெய்கிறோம்; அத்துடன் பயிற்சியை விருத்திசெய்து வழங்குகிறோம்.

மேலதிக தகல்வளுக்கு **cumberland.nsw.gov.au/council/about-council/internal-ombudsman** எனும் இணையப் பக்கத்தினைப் பார்வையிடவும் அல்லது **internalombudsman@cumberland.nsw.gov.au** இற்கு மின்னஞ்சல் செய்யவும்.

**தொலைபேசி: 8757 9044**

# பாராட்டுதல்களும் முறைப்பாடுகளும்

நீங்கள் பெற்றுள்ள சேவை ஒன்றினைப் பற்றி உங்களிடம் பாராட்டுதலோ அல்லது முறைப்பாடோ, எதுவாகவிருந்தாலும் உங்களது பின்னூட்டல் எங்களுக்கு இன்றியமையாததாகும். நாங்கள் அனைத்து பின்னூட்டலையும் மதிக்கின்றோம், ஏனெனில் அது எமது சேவைகளை மேம்படுத்துவதற்கு எமக்கு உதவுகிறது.

**ஒரு பாராட்டுதலை அல்லது முறைப்பாட்டினை சமர்ப்பிப்பது எவ்வாறு:**

மின்னஞ்சல்: **council@cumberland.nsw.gov.au**

தொலைபேசி: **8757 9000**

நேரில் சமுகமளித்தல்:

**மெரிலான்ட்ஸ் சேவை நிலையம்**

16 Memorial Avenue, Merrylands NSW 2160
அலுவலக நேரங்கள்: காலை. 8.00 மணி முதல் மாலை. 4.30 மணி வரை

**ஆபோர்ன் சேவை நிலையம்**

1 Susan Street, Auburn NSW 2144
அலுவலக நேரங்கள்: காலை. 8.00 மணி முதல் மாலைப. 4.30 மணி வரை

மேலதிக தகவல்களுக்கு எமது இணையத்தளத்தினைப் பார்வையிடவும்:



# சபை பற்றியது

அவுஸ்திரேலியாவில், **மூன்று வேறுபட்ட அரசாங்க மட்டங்கள்** காணப்படுகின்றன..

1. **மத்திய அரசாங்கம்** – இது குடிவரவு, வர்த்தகம், பாதுகாப்பு, நாணயம் மற்றும் தொடர்பாடல் சேவைகள் போன்ற, அவுஸ்திரேலியாவில் வசிக்கின்ற அனைத்து மக்களையும் பாதிக்கக்கூடிய விடயம் குறித்தான தேசிய தீர்மானங்களுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.
2. **மாநில அரசாங்கம்** – பாடசாலைகள், வைத்தியசாலைகள், நீர் மற்றும் போக்குவரத்து போன்ற தமது சொந்த மாநிலம் சார்ந்த விடயங்களுக்குப் பொறுப்பானது.
3. **உள்ளூராட்சி அரசாங்கம்** – கழிவு சேகரிப்பு, பூங்காக்கள் மற்றும் கட்டட ஒழுங்குறுத்துகைகள் போன்ற உள்ளூர் விடயங்களுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

**உள்ளூராட்சி அரசாங்கங்கள் சபைகள்** எனவும் அழைக்கப்படுகின்றன.

**கம்பலாந்துச் சபை** என்பது உங்களது உள்ளூராட்சி அரசாங்கத்தின் பெயராகும். நீங்கள் சிறிது காலம் இங்கு வசிப்பவராயின், நீங்கள் ஹொல்ராயிட், ஆபோர்ன் அல்லது பரமட்டா சபையின் பங்காளராக இருந்திருக்கலாம். 2016 மே மாதத்தில், இந்த சபையின் பிரதேசத்தின் பகுதிகள் (*உள்ளூராட்சி அரசாங்கப் பிரதேசம்* அல்லது LGA எனவும் அழைக்கப்படுகிறது) ஒரு புதிய, பெயரளவிலான உள்ளூராட்சி அரசாங்கப் பிரதேசமாகிய கம்பலாந்துச் சபையினை தாபிக்கும் வகையில் ஒன்றாக இணைக்கப்பட்டன.

கம்பலாந்துச் சபையானது சமுதாயத்தின் பாதுகாப்பு, அணுகல் வசதிகள் மற்றும் **242,500 இற்கும் கூடுதலான மக்கள்** வாழ்வதற்கானதொரு சிறந்த இடம் ஆகியவற்றை வழங்குவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இந்த மக்கள் 72 சதுர கிலோமீட்டர் பரப்புடைய **29 பல்வேறு புறநகர்களில்** வாழ்ந்து வருகின்றனர்.

கம்பலாந்துச் சபையின் பொது முகாமையாளர் ஹாமிஷ் மெக்நல்டி ஆவார்.

# MAP OF CUMBERLAND CITY WARDS

CUMBERLAND
CITY COUNCIL

# Cumberland City Councillors

Clr Eddy Sarkis
**M** 0425 348 000
**(Deputy Mayor)**

Clr Greg Cummings
**M** 0417 612 717

Clr Lisa Lake
**M** 0418 669 681

Clr Suman Saha
**M** 0419 546 950

Clr Michael Zaiter
**M** 0418 432 797




Clr Steve Christou
**M** 0419 651 187
**(Mayor)**

Clr Joseph Rahme
**M** 0418 995 471

Clr Ola Hamed
**M** 0405 070 007

Clr Glenn Elmore
**M** 0418 459 527

Clr Paul Garrard
**M** 0414 504 504

Clr Tom Zreika
**M** 0400 805 303

Clr George Campbell
**M** 0409 233 315

Clr Ned Attie
**M** 0419 583 254

Clr Kun Huang
**M** 0418 911 774

**T** 8757 9000 **W** cumberland.nsw.gov.au **E** council@cumberland.nsw.gov.au

## சபை உறுப்பினரின் தொடர்புகொள்ளல் விபரங்கள்

### கிரான்வில தொகுதி

**Clr Steve Christou (Mayor)**
0419 651 187
Steve.Christou@cumberland.nsw.gov.au

**Clr Ola Hamed**
0405 070 007
Ola.Hamed@cumberland.nsw.gov.au

**Clr Joseph Rahme**
0418 995 471
Joseph.Rahme@cumberland.nsw.gov.au

### கிரேய்ஸ்ரான்சஸ் தொகுதி

**Clr Greg Cummings**
0417 612 717
Greg.Cummings@cumberland.nsw.gov.au

**Clr Eddy Sarkis (Deputy Mayor)**
0418 306 918
Eddy.Sarkis@cumberland.nsw.gov.au

### ரெஜண்ட்ஸ் பார்க் தொகுதி

**Clr Ned Attie**
0419 583 254
Ned.Attie@cumberland.nsw.gov.au

**Clr George Campbell**
0409 233 315
George.Campbell@cumberland.nsw.gov.au

**Clr Kun Huang**
0418 911 774
Kun.Huang@cumberland.nsw.gov.au

### தெற்கு கிரான்வில தொகுதி

**Clr Glenn Elmore**
0418 459 527
Glenn.Elmore@cumberland.nsw.gov.au

**Clr Paul Garrard**
0414 504 504
Paul.Garrard@cumberland.nsw.gov.au

**Clr Tom Zreika**
0449 008 888
Tom.Zreika@cumberland.nsw.gov.au

### வென்ட்வோர்த்வில தொகுதி

**Clr Lisa Lake**
0418 669 681
Lisa.Lake@cumberland.nsw.gov.au

**Clr Suman Saha**
0419 546 950
Suman.Saha@cumberland.nsw.gov.au

**Clr Michael Zaiter**
0418 432 797
Michael.Zaiter@cumberland.nsw.gov.au

**For multi-lingual support, please contact the Translating and Interpreting Service (TIS) on 131 450 and ask to be connected to Cumberland City Council on 8757 9000.**

للحصول على المساعدة اللغوية، اتصل بخدمة الترجمة التحريرية والشفهية (TIS) على الرقم 131 450 واطلب الاتصال بمجلس كمبرلاند على الرقم 8757 9000.

如需多语种服务，请致电131 450（翻译与传译服务，TIS），要求接通Cumberland市议会电话8757 9000。

برای پشتیبانی چند زبانه، لطفا با خدمات ترجمان کتبی و شفاهی (TIS) با نمبر 131 450 تماس بگیرید و بخواهید که به شورای کومبرلند به نمبر 8757 9000 وصل کنند.

다국어 지원을 받으려면 통 번역 서비스(TIS)에 131 450으로 연락하여 컴벌랜드 카운슬에 8757 9000으로 연결하도록 요청하십시오.

बहुभाषी सहायता के लिए, कृपया 131 450 पर अनुवाद और दुभाषिया सेवा (TIS) से संपर्क करें और उनसे 8757 9000 पर कंबरलैंड काउंसिल से कनेक्ट करने के लिए कहें.

பல மொழி ஆதரவுக்காக, மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவையைத் (TIS) தொடர்பு கொள்ளவும்.
TIS ஐ 131 450 எனும் தொலைபேசி எண்ணில் அழைத்து 8757 9000 இல் கம்பலாந்து மன்றத்துடன் இணைக்கும் படி கேளுங்கள்.

CUMBERLAND
CITY COUNCIL


**Cumberland City Council**

16 Memorial Avenue, PO Box 42, Merrylands NSW 2160.
**T** 8757 9000 **W** cumberland.nsw.gov.au **E** council@cumberland.nsw.gov.au
Cumberland City Council Sydney cumberlandcitycouncil


May 2020